# முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் - ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் மறைவுக்கு தமிழக சட்டப்பேரவையில் இரங்கல் தீர்மானம்!



சட்டமன்றப் பேரவையில், நேற்று (7.1.2025) இந்திய முன்னாள் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் மற்றும் சட்டமன்றப் பேரவை உறுப்பினர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் ஆகியோரது மறைவிற்கு இரங்கல் தீர்மானமும், சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர் திருமதி. ஆர். தமிழ்மொழி ராஜதத்தன் அவர்களுக்கு இரங்கல் குறிப்பும் நிறைவேற்றப்பட்டு, மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

சென்னை, ஜன.8 -

முன்னாள் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் மற்றும் சட்டமன்ற காங்கிரஸ் கட்சி உறுப்பினர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் ஆகியோர் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து தமிழக சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சட்டப்பேரவை நேற்று காலை 9.30 மணியளவில் கூடியதும் பேரவைத் தலைவர் மு. அப்பாவு அவர்கள், "நெருநல் உளன் ஒருவன் இன்று இல்லை என்னும் 'பெருமை உடைத்து இவ்வுலகு' என்ற திருக்குறளை படித்து பின்னர் அதற்கான விளக்கத்தை எடுத்துரைத்தார். ("இந்த உலகமானது நேற்று உயிருடன் இருந்தவரை இன்று இல்லாமல் செய்து விட்டோம் என்ற அகந்தையைப் பெருமையாகக் கொண்டதாகும்.")

தொடர்ந்து, மேல்மலையனூர் தொகுதி உறுப்பினர் மறைந்த தமிழ்மொழி ராஜதத்தன் மறைவுக்கு இரங்கல் குறிப்பை பேரவைத் தலைவர் படித்தார். பின்னர் அம்மையார் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கும் வகையில் பேரவையில் அனைவரும் அமைதியாக எழுந்து நின்றனர்.

அடுத்து, முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் மற்றும் காங்கிரஸ் கட்சி உறுப்பினர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் ஆகியோர் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

முன்னாள் பிரதமர் மறைந்த மன்மோகன் சிங் பற்றி பேரவைத் தலைவர் மு. அப்பாவு அவர்கள் குறிப்பிடும் போது, 2004 முதல் 2016 வரை இந்திய பிரதமராக பதவி வகித்தபோது உலக அளவில் இந்தியாவின் பெருமையை நிலை நாட்டியவர் என்றும், நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தியவர் என்றும், ரிசர்வ் வங்கியின் ஆளுநர் உள்ளிட்ட பல்வேறு நிதி தொடர்பான பதவிகள் வகித்து சாதனை புரிந்தவர் என்றும், - முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு தமிழ்நாட்டிற்கு சிறப்புமிகு நல்ல பல திட்டங்கள் வழங்கியவர் என்றும் குறிப்பிட்டு தமது இரங்கலை பதிவிட்டார்.

காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர் மறைந்த ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் அவர்களின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து பேரவைத் தலைவர் குறிப்பிடும் போது, 1985 - 1988 வரை சத்திய மங்கலம் தொகுதி சட்டமன்ற உறுப்பினராகவும், 2023ஆம் ஆண்டு முதல் ஈரோடு சட்டமன்றத் தொகுதி உறுப்பினராகவும், 2004 முதல் 2009 வரை கோபி செட்டிப்பாளையம் தொகுதி நாடாளுமன்றத் தொகுதி உறுப்பினராக இருந்து ஒன்றிய அமைச்சராகப் பணியாற்றியவரும்; பாரம்பர்யமிக்க குடும்பத்தில் பிறந்து எல்லோரிடமும் அன்பாகப் பழகியவரும் காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவராக பணியாற்றியவர் என்றும் குறிப்பிட்டு புகழாரம் சூட்டினார்.

இருவரின் மறைவுக்கும் இரங்கல் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, பின்னர் உறுப்பினர்கள் அனைவரும் அமைதியாக எழுந்து நின்று அமைதி காத்தனர்.

இதையடுத்து மறைந்தவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் பொருட்டு சட்டப் பேரவை ஒத்தி வைக்கப்பட்டது.

## தமிழ்நாட்டு மக்களையும், பேரவையையும் தொடர்ந்து அவமதிக்கும்

# ஆளுநரின் செயல் அவரது பதவிக்கு அழகல்ல!

### 'தினகரன்' நாளேடு தலையங்கம்!

சென்னை, ஜன.8-

தமிழ்நாட்டு மக்களையும், அரசையும், பேரவையையும் தொடர்ந்து அவமதித்து வரும் ஆளுநர் ஆர். என்.ரவியின் செயல் அவர் வகிக்கும் பதவிக்கு அழகல்ல என முதல்வர் கடுமையாக விமர்சனம் செய்துள்ளதாக 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.



தினகரன்

அத்துமீறும் ஆளுநர்

அது வருமாறு;-

தமிழக சட்டசபை முதல் கூட்டத்தில் உரையாற்ற வந்த ஆளுநர் ஆர்.என்.ரவி, தமிழ்த் தாய் வாழ்த்து முதலில் பாடியதற்கு எதிர்ப்பு தெரிவித்து அவையில் உரையாற்றாமல் திடீரென புறப்பட்டுச் சென்றது அனைவருக்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

தமிழக சட்டப்பேரவையின் இந்த ஆண்டின் முதல் கூட்டம் ஆளுநர் ஆர்.என். ரவி உரையுடன் தொடங்கும் என அறிவிக்கப்பட்டு, முதல் கூட்டம் நேற்று காலை தொடங்கியது. முன்னதாக சட்டப் பேரவைக்கு வந்த தமிழக ஆளுநரை சபாநாயகர் அப்பாவு வரவேற்றார். இதைத்தொடர்ந்து தமிழ்த்தாய் வாழ்த்து இசைக்கப்பட்டது. பின்னர் உரையை படிக்க எழுந்த ஆளுநர் ஆர்.என்.ரவி, திடீரென சட்டசபையில் இருந்து வெளியேறினார். 3 நிமிடம் மட்டுமே சட்டசபையில் இருந்துள்ளார். கடந்த மூன்று ஆண்டுகளாக அரசின் உரையை வாசிக்காமலேயே சென்றுள்ளார். தமிழ்நாடு அரசின் சாதனைகள் மற்றும் புதிய திட்டங்களுக்கான உரையை படிக்க மனம் இல்லை என்பது தான் நிதர்சனமான உண்மையாகும்.

தமிழ்நாடு சட்டமன்றத்தில் ஆளுநர் நடந்து கொண்ட விதம் என்பது தமிழ்நாடு மக்களையும், சட்டமன்றத்தையும் அவமதிக்கும் செயலாக உள்ளது. பாரம்பரியமாக சட்டமன்றத்தில் நடை பெறும் நிகழ்வை மாற்றும் முயற்சியில் ஆளுநர் நடந்து கொண்டு உள்ளார். தேசிய கீதத்தை பாடும் வரை காத்திராமல் அதை அவமதித்ததே ஆளுநர் தான். ஆளுநர் உரையை வாசித்தால் அரசின் சாதனைகளை அடுக்கடுக்காக பட்டியலிட வேண்டும் என்பதால் ஒரு நாடகத்தை அரங்கேற்றி சென்றுள்ளார். கடந்த முறை தமிழ் நாட்டின் தலைவர்கள் பெயரை படிக்காமல் மறைத்தவர், தற்போது ஆளுநர் உரையையே படிக்காமல் சென்றுள்ளார் என அனைத்துக் கட்சிகளும், சமூக அமைப்புகளும் கண்டனம் தெரிவித்துள்ளன.

தேசபக்தியில் தமிழ்நாட்டு மக்களை விஞ்சி ஆளுநர் கிடையாது. சட்டமன்ற அவையை அவமதித்த ஆளுநர் உடனடியாக மன்னிப்பு கேட்க வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தை விட தான் பெரியவர் என்ற மனநிலையில் ஆளுநர் நடந்து கொள்கிறார் என அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

"தனது அரசியல் சட்டக் கடமைகளைச் செய்யவே மனமில்லாதவர் அந்தப் பதவியில் ஏன் ஒட்டிக் கொண்டிருக்க வேண்டும்?" என்பதே அனைவர் மனதிலும் எழும் வினா. தமிழ்நாட்டு மக்களையும், அரசையும், சட்டப்பேரவையையும் தொடர்ந்து அவமதிக்கும் ஆளுநரின் செயல் அவர் வகிக்கும் பதவிக்கு அழகல்ல. கடந்த ஆண்டுகளில் இருந்ததை வெட்டியும், இல்லாததை ஒட்டியும் வாசித்த ஆளுநர் இம் முறை வாசிக்காமலேயே போயிருப்பது சிறுபிள்ளைத்தனமானது. அரசியல் சட்டப்படி, ஆண்டின் தொடக்கத்தில் அரசின் உரையை மாநில ஆளுநர் வாசிப்பது சட்டமன்ற ஜனநாயகத்தின் மரபு. அதை மீறுவதையே தனது வழக்கமாக வைத்துள்ளார் ஆளுநர் ஆர். என்.ரவி என முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடுமையாக விமர்சனம் செய்துள்ளார்.

வெளிநடப்பு குறித்து ஆளுநர் மாளிகை தந்த விளக்கம் ஏற்கத்தக்க அளவுக்கு இல்லை என்பது அனைவருக்கும் தெரியும். மரபுகளை மாற்றுவது ஒன்றியத்தை ஆளும் பா.ஜ.வுக்கு புதியதல்ல. ஒன்றிய அரசுக்கு விசுவாசம் காட்டும் நோக்கத்தில் ஆளுநர்கள் செயல்படுகின்றனர். பா.ஜ. ஆட்சி இல்லாத மாநிலங்களில், அம்மாநில அரசுகளுக்கு நற்பெயர் வந்துவிடக்கூடாது என்பதற்காக அத்துமீறும் ஆளுநர்களின் செயல்பாடுகள் பொது மக்களுக்கு அதிலும் தமிழ்நாட்டு மக்களுக்கு நன்றாக தெரியும். மரபுகளை மாற்றாமல் ஆளுநர் செயல்படுவது தான் சிறந்ததாகும்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.



தூத்துக்குடி மாவட்டம் திருவைகுண்டம் ஊராட்சி ஒன்றியம் பழைய காயல் ஊராட்சி ஒன்றியத்தில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் ரூபாய் 13.57 இலட்சம் செலவில் புதிதாக கட்டப்பட்டுள்ள அங்கன்வாடி மைய கட்டிடத்தினை மீன்வளம் மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் திறந்து வைத்தார். உடன் திருவைகுண்டம் சட்டமன்ற உறுப்பினர் தி.ஊர்வசி, செ.அமிர்தராஜ், மாவட்ட ஆட்சியர் இளம்பகவத், மாநில வர்த்தகர் அணி இணைச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ்.உமரிசங்கர், மாவட்ட பஞ்சாயத்து தலைவர் அ.பிரம்மசக்தி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பை.மூ.ராமஜெயம்,பில்லா ஜெகன் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# ஆளுநரைக் கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம்!



தமிழ்நாட்டையும் தமிழ்த்தாய் வாழ்த்தையும் தொடர்ந்து அவமானப்படுத்தும் ஆளுநரைக் கண்டித்தும், ஒன்றிய அரசின் ஏஜெண்ட்டாக தமிழ்நாட்டின் உரிமைகளில் அத்துமீறல்களைச் செய்யும் ஆளுநரைக் காப்பாற்றிடவும், ஒன்றிய அரசின் மீதுள்ள தமிழ்நாட்டு மக்களின் கோபத்தை திசைமாற்றும் வித்தைகளைச் செய்யும் அ.தி.மு.க. – பா.ஜ.க. கள்ளக் கூட்டணியைக் கண்டித்தும் கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நாகர்கோவில், தலைமை தபால் நிலையம் முன்பு வைத்து மாவட்ட செயலாளர், மேயர் ரெ.மகேஷ் தலைமையில் நடைபெற்றது. மாநகர செயலாளர் வழக்கறிஞர் ப.ஆனந்த் முன்னிலை வகித்தார். ஆர்ப்பாட்டத்தில் என்.தில்லைசெல்வம், ஜெ.ஹெலன் டேவிட்சன், என்.சுரேஷ்ராஜன், எப்.எம்.இராஜரத்தினம், ஐ.கேட்சன், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள் உட்பட மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட, கிளை கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் மற்றும் பொது மக்கள் பலர் கலந்து கொண்டனர்.



தூத்துக்குடி வடக்கு தெற்கு மாவட்டம் சார்பாக மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி தலைமையில் ஆளுநர் ரவியை எதிர்த்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது உடன் மாநகரச் செயலாளர் ஆனந்த சேகரன் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் பை.மூ.ராமஜெயம், சி.எம்..மதியழகன், துணை மேயர் திருமதி ஜெனிட்டா செல்வராஜ்,மாவட்ட அவைத் தலைவர் செல்வராஜ்,மாவட்ட பஞ்சாயத்து தலைவர் அ.பிரம்மசக்தி, மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் துறைமுகம் புளோரன்ஸ்,ஒன்றிய செயலாளர்கள் பீக்கிளிப்பட்டி முருகேசன்,ராதாகிருஷ்ணன்,புதூர் ராதாகிருஷ்ணன்,சின்ன மாரிமுத்து,அன்புராஜ்,நவநீத கண்ணன்,மும்மூர்த்தி, திருச்செந்தூர் நகர் மன்ற துணைத் தலைவர் ஏ.பி.ரமேஷ்,நவின் குமார்,உடன்குடி டி.பி.பாலசிங், பரமங்குறிச்சி இளங்கோ,சதிஷ் குமார்,பொதுக் குழு உறுப்பினர் ரமேஷ்,மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



மாவட்டக் கழகச் செயலாளர் அறிவுறுத்தலின்படி ஒன்றிய அரசின் எடுபுடி ஆர்.என். ரவியை கண்டித்து இராமநாதபுரம் மாவட்ட தி.மு.க. சார்பில் அவைத் தலைவர் முன்னாள் அமைச்சர் சத்தியமூர்த்தி தலைமையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது ஆர்ப்பாட்டத்தில் துணைச் செயலாளர் கே.கருப்பையா, மாநில இளைஞரணி துணைச் செயலாளர் ஏ.என். இன்பா ராகு,முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பவானி ராஜேந்திரன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முருகவேல், முன்னாள் மாவட்ட கழக செயலாளர் சுப.த. திவாகரன்,மாநில விவசாய அணி துணைச் செயலாளர் குணசேகரன், மாநில வர்த்தக அணி துணை அமைப்பாளர் ராமர், இராமநாதபுரம் நகர் மன்ற தலைவர் ஆர்.கே. கார்மேகம், துணைத் தலைவர் பிரவீன் தங்கம், மற்றும் அனைத்து நகர மன்ற தலைவர்கள்,உட்பட மாநில மாவட்ட ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகள் மகளிர் அணி நிர்வாகிகள் கட்சித் தொண்டர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாட்டில் அத்துமீறும் ஆளுநரையும் அவரை காப்பாற்றும் அ.தி.மு.க. – பா,ஜ.க. கள்ளக் கூட்டணியையும் கண்டித்து தேனி தெற்கு மாவட்டம்சின்னமனூரில் தீர்மானக் குழு இணை செயலாளர் ஜெயக்குமார் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. நகர செயலாளர் முத்துக்குமார் மாநிலகொள்கை பரப்பு துணைச் செயலாளர்அம்பிகா பாண்டியன் மற்றும் ஒன்றிய செயலாளர்கள் நகர செயலாளர்கள் பேரூர் செயலாளர்சார்பு அணி நிர்வாகிகள்கலந்து கொண்டனர்



ஆளுநர் ரவியைக் கண்டித்து திண்டுக்கல் மாவட்ட கழகத்தின் சார்பில் திண்டுக்கல்லில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் அவைத்தலைவர்கள் காமாட்சி, மோகன், துணைச்செயலாளர்கள் நாகராஜன், மார்க்கிரேட்மேரி, ராஜாமணி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் தண்டபாணி, பொருளாளர் சத்தியமூர்த்தி,மாநகர செயலாளர் ராஜப்பா, மேயர் இளமதி ஜோதி பிரகாஷ் உட்பட பல்லாயிரக்கணக்கான நிர்வாகிகள் தொண்டர்கள் திரளாக கலந்து கொண்டனர்.



மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் வாடிப்பட்டியில் தமிழ்நாட்டையும் தமிழ்த்தாய் வாழ்த்தையும் தொடர்ந்து அவமதித்து வரும் ஆளுநர் ஆர்.என்.ரவியைக் கண்டித்து மாவட்டச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி அறிவுறுத்தலின்படி, மாவட்ட துணை செயலாளர் ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ., ஆலோசனையின்படி மாவட்ட அவைத் தலைவர் எம்.ஆர்.எம். பாலசுப்பிரமணியன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் வாடிப்பட்டி பேரூர் செயலாளர் மு.பால்பாண்டியன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் புதூர் சேகர், வடிவேல் முருகன் உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள் மற்றும் கழகத்தினர் கண்டன முழக்கமிட்டனர்.